# சைவ சமய சாரம்

## (வினா - விடைத் தொகுப்பு)



வெளியீடு :

## நாவலப்பிட்டி இந்து மன்றம்

நாவலப்பிட்டி இந்து மன்றம்

தொண்டு வழி நிற்போம்

# தேவாரம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண் ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர்
அருட்துறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே.


# திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

# விநாயகர் வணக்கம்



ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# சமர்ப்பணம்



நாவல் நகரில் சமய வளர்ச்சிக்கு
தொண்டாற்றிய பெருந்தகை

**இறைப்பணிச் செம்மல்**

அமரர் **S. முத்தையாபிள்ளை**

அவர்களுக்கு

# இந்து மன்ற தலைவரின் ஆசிச் செய்தி

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி**

எல்லாம் வல்ல இறைவனின் பாதம் பணிந்து, இந்து மன்ற வெளியீடாக வெளிவரும் "சைவ சமய சாரம்" என்ற வினா விடை நூலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வு அடைகின்றேன்.

"தொண்டு வழி நிற்போம்" என்ற எமது மகுட வாசகத்திற்கு ஏற்ற மன்ற சேவைகள் பலதரப்பட்டு காணப்படுகின்றன. அவ்வகையில் மாணவர்களது சமய அறிவை வளர்ப்பதற்கு ஏதுவாக ஒரு நூலை வெளியிட வேண்டும் என்று எமது மன்றம் தீர்மானித்தது. அதற்கமைய முதல் வெளியீடாக இந்நூல் அமைவது பெரும் பாக்கியம் என்றே கருதுகின்றேன்.

எமது சமூக வளர்ச்சி கல்வி வளர்ச்சியிலும், கலாசார வளர்ச்சியிலுமே தங்கியுள்ளது. கல்வியும், கலாசாரமும் வளர நாம் சமய வழியில் நின்று வாழ வேண்டும். சமய அறிவு என்பது ஏட்டு கல்வியாக இல்லாமல் வாழ்வோடு இணையும் போதே அதன் முழுப் பயனை நாம் அடையலாம். அவ்வகையில் எமது மன்ற சேவையானது சமயத்தின் ஊடாக சமூக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதேயாகும்.

அவ்வகையில் சைவ சமய வினா விடை நூலை தொகுத்து வெளியிட உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எனது பாராட்டுகளை வழங்குவதுடன் சேவைகள் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

தேசபந்து, தேச கீர்த்தி R. இராஜேந்திரன் J.P.
தலைவர்,
நாவலப்பிட்டி இந்து மன்றம்,
நாவலப்பிட்டி.

# வாழ்த்துரை

நாவலப்பிட்டி இந்து மன்றம் மலையக மாணவர்கள் பயன் பெறும் பொருட்டு இந்து சமய வினா விடை புத்தகம் ஒன்றினை வெளியிடுவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன்.

இந்து மன்றமானது பல கல்விமான்களை தன்னகத்தே கொண்டு பல அளப்பரிய சேவைகளை செய்து வருவது கண்கூடு. கோயில்கள் தோறும் சமய விழாக்கள், சொற்பொழிவுகள், வகுப்புகள் இப்படி இன்னோரன்ன ஆன்மீக பணிகளை செய்து வருகின்றது. மலையகத்திலே குறிப்பாக பின்தங்கியோர் வாழ்கின்ற பகுதியிலே இவர்கள் முன்னெடுத்துச் செல்கின்ற செயற்பாடுகள் பாராட்டக் கூடியவை.

ஆன்மீகம், அழகியற்துறை என பல துறைகளிலும் சேவையாற்றிய இந்து மன்றம் தற்போது கல்வித் துறையிலும் தனது சேவையை நிலை நிறுத்தியிருக்கின்றது. தரம் 6 முதல் 11 வரையிலான மாணவர்கள் பயன்பெறக் கூடியவாறான பாடத்திட்டத்தை தழுவியதான வினா விடை புத்தகம் ஒன்றினை திருவாளர் செ. தமிழ்ச் செல்வன் உ.க.ப அவர்களின் குழுவினர் இந்து மன்றத்தின் ஊடாக தயாரித்து வெளியிட்டுள்ளனர். நிச்சயமாக இதன் மூலம் இந்து சமயம் கற்கின்ற ஒவ்வொரு மாணவனும் பயன் பெறுவது என்பது எனது நம்பிக்கை.

எனவே மனித குலம் பயன்பெற பல்வேறு துறைகளிலும் தன்னாலான பணிகளை ஆற்றிவரும் இந்து மன்றம் மென்மேலும் பணிகள் பல புரிந்து பாரோர் பயன் பெற்றிட எம் ஸ்ரீ சித்தி விநாயக பெருமான் அருள் புரிவாராக!

தங்களது கல்வித் துறை சார் இம்முயற்சி வெற்றி பெற வாழ்த்துவதோடு இந்து மன்ற சேவைகளுக்கும் எனது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

"வளர்க தங்கள் சேவை"

நன்றியுடன்

**திரு. P. S.சதீஸ்**

மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்,
மத்திய மாகாண கல்வி திணைக்களம்,
கண்டி.

# பதிப்பாசிரியரிடமிருந்து ......

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணம் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதா முன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்"

என்ற மகாகவியின் வரிக்கேற்ப, அன்னையை வணங்கி நாவலப்பிட்டி இந்து மன்ற முதல் வெளியீடாக வெளிவரும் சைவசமய சாரம் என்ற நூலின் பதிப்பாசிரியராக இருந்து செயற்படுகின்றமை பெரும் பேறாகும் எனக் கருதுகின்றேன்.

சைவ சமயத்தை கற்கும் மாணவர்களுக்கு உதவும் நூலாக சமயசாரத்தை வினா விடை வடிவில் வெளியீட வேண்டும் என எமது மன்ற செயற்குழு ஏகமனதாக தீர்மானித்து அப்பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து அதற்கமைய இந்நூலை வெளியிட பாரிய செலவு ஆகும் என நினைத்து கொண்டிருந்த போது, கோயில் திரு விழாவின் போது மூலஸ்தானத்தின் முன்னே நின்று "தாங்கள் வெளியிட நினைக்கும் வினாவிடை புத்தகத்திற்கு பூரண உதவியை செய்கின்றோம். தங்கள் முயற்சியை தொடருங்கள்" என தெய்வ வாக்கு கொடுத்தார் புரவலர் திரு. ஸ்ரீகாந் முத்தையா பிள்ளை அவர்கள். முதற்கண் அவருக்கும் அவரோடு இணைந்து வெளியிட உதவிய அன்பர்களுக்கும் மன்றத்தின் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிரின்வூட் த.வி ஆசிரியர் திரு. தா. கிருஸ்ணகுமார் அவர்கள் பாடத்திட்டத்திற்கு அமைய வினாக்களை தொகுத்து கொடுத்து பெருமை பெற்றார். அதனை மீள்பரிசீலனை செய்து ஒழுங்கு படுத்தியவர் உ.க.ப திரு. கிருஸ்ணபிள்ளை அவர்கள். இருவருக்கும் எமது நன்றிகளை பகிர்கின்றோம். அத்துடன் வாழ்த்துச் செய்தி தந்துதவிய மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. P. S. சதீஸ் அவர்களுக்கும் நன்றிகள்.

ஆரம்ப கணனி பதிப்பை செய்து கொடுத்த கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. S. செல்வராஜ் அவர்களுக்கும், அவர்களது குழுவினர்களுக்கும் நன்றி பாராட்டுவதுடன், எமது மன்ற தலைவர், செயலாளர் உட்பட சகல உறுப்பினர்களுக்கும் இந்நூல் வெளிவர உதவி புரிந்தமைக்காக பாராட்டுகின்றேன்.

அத்தோடு இதனை குறுகிய காலத்தில் மிக அழகாகவும், நேர்த்தியாகவும் அச்சிட்ட ராஜா அச்சக உரிமையாளர் மற்றும் அவரது குழுவினருக்கும் நன்றியை தெரிவிக்கின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

இந்து மன்றம்,
நாவலப்பிட்டி.

திரு. செ. தமிழ்ச்செல்வன்

**சரியான விடையை தெரிவு செய்க.**

**1. சித்தியையும் புத்தியையும் சக்திகளாக கொண்ட கடவுள்**

1. விநாயகர் 2. பிரம்மா 3. விஷ்ணு 4. முருகன்

**2. "ஏகம் சத் விப்ரா வகுதா வதந்தி" எனும் வாக்கியம்**

1. வேதம் 2. ஆகமம் 3. புராணம் 4. இதிகாசம்

**3. "ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க" என்று இறைவனை கூறியவர்**

1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மணிவாசகர்

**4. "அப்பன் நீ அம்மை நீ ஐயன் நீ" எனப் பாடியவர்**

1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மணிவாசகர்

**5. "சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை" என்ற அடிகளை உள்ளடக்கியது**

1. தேவாரம் 2. திருவாசகம் 3. பெரியபுராணம் 4. திருமந்திரம்

**6. விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களில் ஒன்று**

1. மார்கழி திருவாதிரை 2. திருகார்த்திகை
3. பங்குனித்திங்கள் 4. பெருங்கதை

**7. இறைவன் புரியும் தொழில்களின் எண்ணிக்கை**

1. எட்டு 2. ஐந்து 3. மூன்று 4. ஒன்பது

**8. "எல்லா உலகமும் ஆனாய் நீயே" எனப் பாடியவர்**

1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மணிவாசகர்

**9. உலகத் தோற்றம் , ஒடுக்கம் அனைத்திற்கும் காரணமானவர்**

1. கடவுள் 2. சித்தர் 3. அரசன் 4. விஞ்ஞானி

**10. சிவ சம்பந்தமுடையது**

1. சாக்தம் 2. வைணவம் 3. சைவம் 4. சௌரம்

**11. தினமும் வீட்டில் விளக்கேற்றி பூ வைத்து தோத்திரம் பாடும் செயற்பாடு**

1. நாளாந்தக் கடமை 2. இறை வழிபாடு
3. சமய செயற்பாடு 4. சமய விழுமியம்

**12. திருநீறு தரித்து சந்தன குங்குமப் பொட்டு வைத்தல் என்பன இடம்பெறுவது**

1. இறை வழிபாட்டின் பின்பு 2. இறை வழிபாட்டிற்கு முன்பு
3. பஞ்சபுராணம் பாடிய பின்பு 4. தேவாரம் ஓதிய பின்பு

**13. பெற்றோர் பெரியோர் கால்களில் வீழ்ந்து வணங்கும்நேரம்**

1. வீட்டில் இருக்கும் போது 2. வீட்டை விட்டு வெளியேறும் போது
3. சாப்பிட முன்பு 4. பண்டிகையின் போது

**14. விருப்பத்தைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் கிரியை**

1. நித்திய 2. நைமித்திய 3. காமிய 4. மகோற்சவம்

**15. மாசிமாத கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில் நோற்பது**

1. நவராத்திரி 2. சிவராத்திரி 3. குருதீட்சை 4. மாசிமகம்

**16. மகரசங்கிராந்தி என அழைக்கப்படுவது**

1. தீபாவளி 2. தைப்பொங்கல்
3. ஆடிப்பிறப்பு 4. கார்த்திகை விளக்கு

**17. தினந்தோறும் ஆலயத்தில் நடைபெறுவது**

1. நித்திய கிரியை 2. நைமித்திய கிரியை
3. காமிய கிரியை 4. தீட்சை

**18. தீபங்களின் வரிசை என்பது**

1. திருக்கார்த்திகை 2. தீபாவளி 3. விளக்கீடு 4. ஆலயதீபம்

**19. ஆடிப்பிறப்பு, நவராத்திரி, கார்த்திகை விளக்கீடு என்பன கொண்டாடப்படுவது**

1. வீடுகளில் 2. பாடசாலைகளில் 3. ஆலயத்தில் 4. இவையாவும்

**20. ஆலயத்தில் கொண்டாடப்படுவது**

1. நவராத்திரி 2. பிரம்மோற்சவம்
3. சித்திரை வருடப்பிறப்பு 4. ஆடிப்பிறப்பு

**21. அன்பு, கருணை என்பன**

1. சமய விழுமியம் 2. நற்பண்பு
3. சமூக விழுமியம் 4. தேசிய விழுமியம்

**22. சமய ஆசாரங்களும் சமய உண்மை சார்ந்த நடத்தைகளும்**

1. சமய விழுமியம் 2. நற்பண்பு 3. ஜீவகாருண்யம் 4. பிரார்த்தனை

**23. வாழ்வியல் சடங்குகளில் ஒன்று**

1. கூத்து 2. பொலி சடங்கு 3. ஆடிப்பிறப்பு 4. ஏடு தொடங்கல்

**24. விஜயதசமி தினத்தன்று செய்யப்படுவது**

1. ஆயுத பூசை 2. மகேஸ்வர பூசை
3. சரஸ்வதி பூசை 4. கும்ப பூசை

**25. சமயத்தை அடிப்படையாகக் கொண்ட சடங்கு**

1. திருவிழா 2. வாழ்வியல் சடங்கு
3. ஓணம் பண்டிகை 4. பஞ்ச புராண ஓதல்

**26. பங்குனி உத்தரம்**

1. மாத விரதம் 2. வார விரதம் 3. வருட விரதம் 4. நாள் விரதம்

**27. பெருங்கதை விரதத்திற்கு உரியவர்**

1. சிவன் 2. விஷ்ணு 3. முருகன் 4. பிள்ளையார்

**28. சக்திக்குரிய தினம்**

1. மாசி மகம் 2. பங்குனி உத்தரம்
3. பங்குனித்திங்கள் 4. தைப் பூசம்

**29. திரி கரணங்கள்**

1. ஆணவம், கன்மம், மாயை 2. மனம், வாக்கு, காயம்
3. பதி, பசு, பாசம் 4. சூரியன், சந்திரன், அக்கினி

**30. சிவ விரதங்கள் இரண்டு**

1. பெருங்கதை, திருவாதிரை   2. திருவாதிரை, கேதாரகௌரி
3. பங்குனித்திங்கள், பங்குனி உத்தரம்
4. கந்த சஷ்டி, திருப்பாவை.

**31. தைமாதத்தின் முதல்நாளில் சூரியனுக்கு நன்றி தெரிவிக்குமுகமாக கொண்டாடப்படுவது**

1. மாட்டுப்பொங்கல்   2. தைப்பொங்கல்   3. தீபாவளி 4. தைப்பூசம்

**32. சித்திரை வருடப்பிறப்பு கொண்டாடப்படுவது**

1. சித்திரை மாத முதல் நாள்   2. கார்த்திகை மாத முதல் நாள்
3. சித்திரை மாத இறுதி நாள்   4. ஆடி முதல் நாள்

**33. தைப்பொங்கலை இவ்வாறும் அழைப்பர்**

1. போகிப்பொங்கல்   2. மாட்டுப்பொங்கல்
3. அறுவடைத்திருநாள்   4. சூரியப்பொங்கல்

**34. சூரியன் தனுசு ராசியிலிருந்து மகரராசிக்கு செல்லும் தினத்தில் கொண்டாடப்படுவது**

1. புது வருடப்பிறப்பு   2. இராசி வருடப்பிறப்பு
3. தைப்பொங்கல்   4. மகர திருவிழா

**35. கை விஷேடம் வழங்குவது**

1. சித்திரைப் புத்தாண்டில்   2. தீபாவளிக்கு
3. ஆடிப்பிறப்புக்கு   4. நவராத்திரியின் போது

**36. சித்திரை வருடப்பிறப்பை கொண்டாடும் பிற சமயத்தவர்கள்**

1. கிறிஸ்தவர்கள்   2. சீக்கியர்கள்
3. பௌத்தர்கள்   4. வைணவர்கள்

**37. புது வருடக் கொண்டாட்டம் இடம் பெறுவது**

1. மேட ராசிக்கு சூரியன் புகும் போது
2. தனு ராசிக்கு சூரியன் புகும் போது
3. உத்தராயண இறுதி நாளில்
4. தட்சிணாயன காலத்தில்

**38. சூரியனை முழு முதற் கடவுளாக வழிப்படுவோர்?**

1. சைவர்   2. சாக்தர்   3. வைணவர்   4. சௌரர்

**39. மூவகை வழிபாடுகளில் ஒன்று**

1. சங்கம வழிபாடு   2. அக்கினி வழிபாடு
3. சிவ வழிபாடு   4. மர வழிபாடு

**40. திரு முறைகளின் எண்ணிக்கை**

1. 16   2. 9   3. 8   4. 12

**41. சண்டேஸ்வர நாயனார் நின்ற நெறி**

1. சரியை   2. கிரியை   3. யோகம்   4. ஞானம்

**42. இறைவனால் கொன்றை மாலை கட்டப்படும் பேறு பெற்றவர்?**

1. திருமூலர் 2. சண்டேஸ்வரர்
3. மெய்கண்டார் 4. அப்பூதியடிகள்

**43. தேவாரம் வேதாசாரம் என கூறியவர்**

1. சம்பந்தர் 2. வேதவியாசர்
3. காசிவாசிசெந்திநாதையர் 4. காரைக்காலம்மையார்.

**44. முதல் ஏழு திருமுறைகளும் இவ்வாறு அழைக்கப்படும்**

1. தேவாரம் 2. திருவாசகம்
3. திருவிசைப்பா 4. பஞ்சபுராணம்

**45. திருஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் என்போர்**

1. திருவாசகம் பாடியோர் 2. தேவார முதலிகள்
3. சமய குரவர்கள் 4. சந்தான பரம்பரை

**46. தெய்வத்துக்கு சூட்டப்படும் பாமாலை**

1. பூமாலை 2. மணிமாலை 3. தேவாரம் 4. பட்டு மாலை

**47. தேவாரம் பாடுவதால் கிடைக்கும் நன்மை**

1. குரல் தெளிவு பெற 2. குழு ஒருமைப்பாடு
3. இறை தரிசனம் 4. மன அமைதி

**48. தத்துவ சிறப்பு மிக்க பாடல்கள்**

1. தேவாரம் 2. திருவாசகம் 3. திருவிசைப்பா 4. திருப்புகழ்

**49. 'சங்க நிதி பதுமநிதி" தேவாரத்தைப் பாடியவர்**

1. திருஞானசம்பந்தர் 2. நாவுக்கரசர் 3. சுந்தரர் 4. மணிவாசகர்

**50. திருவாசகம் பாடியவர்**

1. திருஞானசம்பந்தர் 2. நாவுக்கரசர்
3. சுந்தரர் 4. மணிவாசகர்

**51. பஞ்ச தோத்திரம் பாடும் போது இரண்டாவதாக பாடுவது**

1. தேவாரம் 2. திருவாசகம்
3. பெரிய புராணம் 4. திருப்பல்லாண்டு

**52. மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலையைப் பாடியவர்**

1. பரண தேவர் 2. கபில தேவர் 3. குமர குருபரர் 4. சம்பந்தர்

**53. இசையுடன் பாடப்படுபவை**

1. திருவாசகம் 2. திருவிசைப்பா 3. திருமந்திரம் 4. தேவாரம்

**54. "சிவ சிவ என்கிலர்" என பாடியவர்**

1. சிவாக்கியார் 2. பட்டிணத்தார்
3. செல்லப்பா சுவாமிகள் 4. திருமூலர்

**55. அருண கிரி நாதரால் பாடப்பட்டது**

1. திருப்புகழ் 2. கந்தபுராணம் 3. ஆத்திச்சூடி 4. நல்வழி

**56. கச்சியப்ப சிவாச்சாரியாரால் பாடப்பட்டது**

1. பெரியபுராணம்
2. கந்தபுராணம்
3. சிவபுராணம்
4. கந்தர்கலி வெண்பா

**57. "சகலகலாவல்லி மாலை" பாடியவர்**

1. குமரகுருபரர்
2. அகத்தியர்
3. அபிராமிப் பட்டர்
4. ஸ்ரீ நாத முனிகள்

**58. தாயுமானவர் பாடியது**

1. பராபரக் கண்ணி
2. சகலகலா வல்லி மாலை
3. கந்தரலங்காரம்
4. சிவபுராணம்

**59. பன்னிரு திருமுறைகள் பாடியோர் எண்ணிக்கை**

1. 12
2. 40
3. 27
4. 3

**60. இறைவனைப் பாராயணம் பண்ணும் நூல்கள்**

1. தேவாரங்கள்
2. திருமுறைகள்
3. திருமந்திரம்
4. திருவிளையாடல் புராணம்

**61. திருமுறைகளைத் தொகுப்பித்தவர்**

1. அபயகுல சேகர சோழன்
2. நம்பியாண்டார் நம்பி
3. அதிராவடிகள்
4. சேரமான் பெருமாள்

**62. நாற்பது பிரபந்தங்களைப் பாடியோர் தொகை**

1. 16
2. 12
3. 8
4. 40

**63. ஈழத்தைச் சிவபூமியெனக் கூறியவர்**

1. திருமூலர்
2. காரைக்காலம்மையார்
3. சேக்கிழார்
4. யோகர் சுவாமிகள்

**64. திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் அடங்கும் திருமுறை**

1. 7
2. 9
3. 5
4. 11

**65. அருண்மொழித் தேவர் எனச் சிறப்பிக்கப்படுபவர்**

1. சேதிராயர்
2. சேக்கிழார்
3. பட்டினத்தடிகள்
4. பரமதேவர்

**66. ஆழ்வார்களின் எண்ணிக்கை**

1. 17
2. 19
3. 7
4. 12

**67. முதலாழ்வார்கள் எனச் சிறப்பிக்கப்படுவோரின் எண்ணிக்கை**

1. மூவர்
2. எழுவர்
3. இருவர்
4. ஐவர்

**68. கண்ணி நுண் சிறுதாம்பு என்ற பாடலைப் பாடியவர்**

1. பொய்கையாழ்வார்
2. மதுரகவியாழ்வார்
3. பேயாழ்வார்
4. குலசேகராழ்வர்

**69. முதலாந் திருவந்தாதி பாடியவர்**

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. ஆண்டாள்
4. நம்மாழ்வார்

**70. பெரிய திருமடல் பாடியவர்**

1. நம்மாழ்வார் 2. திருமங்கையாழ்வார்
3. பூதத்தாழ்வார் 4. பெரியாழ்வார்.

**71. திருமுறைகளில் இதிகாசக் கருத்துகள் இடம்பெறுவதன் நோக்கம்**

1. இதிகாசக் கதை கூற 2. இராமனின் கதை கூற
3. நம்பியாண்டார் நம்பி பற்றிக் கூற
4. மக்களை நன்னெறிப்படுத்துவதற்கு

**72. பாற்கடல் கடைந்த புராணக் கதை கூறும் தேவாரம்**

1. கோலமால்வரை 2. ஆலந்தானுகந்து
3. இடரினும் தளரினும் 4. நீள நினைந்தடியேன்

**73. பெரிய புராணத்தின் பாட்டுடைத் தலைவர்**

1. சம்பந்தன் 2. சுந்தரர் 3. ஆகத்தியர் 4. வேதவியாசர்

**74. தடுத்தாட் கொண்ட புராணக் காப்பு பாடப்பட்ட தெய்வம்**

1. நடராஜர் 2. விநாயகர் 3. முருகன் 4. விஷ்ணு

**75. ஆதபம் என்பதன் கருத்து**

1. வெயில் 2. மழை 3. முகில் 4. வானம்

**76. கண்டிகை என்பது**

1. திருநீறு 2. உருத்திராக்க மாலை
3. கண்ணாடி 4. சந்தனம்

**77. சுந்தரமூர்த்தி நாயனார் கயிலையில் அழைக்கப்பட்ட விதம்**

1. ஆலாலசுந்தரர் 2. தமிழ் வேந்தன்
3. நரசிங்கமுனையர் 4. சிங்கடியப்பன்

**78. நள்ளிரவுப் பூசை இவ்வாறு அழைக்கப்படும்**

1. காலைச் சந்தி 2. உச்சிக் காலம்
3. சாயரட்டை 4. அர்த்தயாமம்

**79. நித்திய பூசையில் ஏற்படும் குறைபாட்டை நிவர்த்தி செய்வது**

1. நைமித்தியப் பூசை 2. காமிய பூசை
3. கும்பாபிஷேகம் 4. மஹோற்சவம்

**80. ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்துவது**

1. மஹோற்சவம் 2. பிரம்மோற்சவம்
3. கொடியேற்றம் 4. தேர்த்திருவிழா

**81. தேர்த்திருவிழா குறிப்பிடும் தொழில்**

1. படைத்தல் 2. காத்தல் 3. அழித்தல் 4. அருளல்

**82. மறைத்தல் தொழிலைக் குறிப்பது**

1. கொடியேற்றம் 2. மௌனோற்சவம்
3. தேர்த்திருவிழா 4. தீர்த்தோற்சவம்

**83. சைவத்தை வளர்க்கவும் மக்களிடம் பக்தியை ஏற்படுத்தவும் முன்னின்று பங்காற்றியவர்**

1. சமயப் பெரியார்கள் 2. சமய குரவர்
3. சந்தான குரவர் 4. சித்தர்கள்

**84. திருஞான சம்பந்தர் நின்ற நெறி**

1. சரியை 2. கிரியை 3. யோகம் 4. ஞானம்

**85. திருநாவுக்கரசர் அடைந்த முக்தி**

1. சாமீபம் 2. சாலோகம் 3. சாரூபம் 4. சாயுச்சியம்

**86. மஹரசங்கராந்தி என அழைக்கப்படுவது**

1. தீபாவளி 2. தைப்பொங்கல்
3. புதுவருடப் பிறப்பு 4. ஆடிப்பிறப்பு

**87. திருநாவுக்கரசர் முதலில் பாடிய பதிகம்**

1. தோடுடைய செவியன் 2. கூற்றாயினவாறு
3. பித்தாபிறைசூடி 4. அம்மையே அப்பா

**88. மாணிக்கவாசகர் அடைந்த முக்தி**

1. சாமீபம் 2. சாலோகம் 3. சாரூபம் 4. சாயுச்சியம்

**89. திருவாதவூரர் என அழைக்கப்படுபவர்**

1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மணிவாசகர்

**90. மாணிக்கவாசகர் நின்ற நெறி**

1. யோகம் 2. ஞானம் 3. சரியை 4. கிரியை

**91. முத்தமிழ் வீரகர் எனப் போற்றப்படுபவர்**

1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மணிவாசகர்

**92. சுந்தர மூர்த்தி நாயனாரின் வேறு பெயர்**

1. கவுணியர் கோன் 2. ஆளுடைய அரசர்
3. வனப்பகை அப்பன் 4. கோவை வேந்தர்

**93. மாணிக்கவாசகரின் தந்தையார்**

1. புகழனார் 2. சடையனார்
3. சம்புபாதாசிரியர் 4. சிவபாதவிருதயர்

**94. திருநாவுக்கரசர் முதலில் அருள் பெற்ற தலம்**

1. திருப்பிரம்ம புரம் 2. திருவதிகை வீரட்டாணம்
3. திருவெண்ணெய் நல்லூர் 4. திருப்பெருந்துறை

**95. சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்ந்த காலம்**

1. 16வருடம் 2. 81 வருடம் 3. 18 வருடம் 4. 32 வருடம்

**96. சமகாலத்து நாயன்மார் இருவர்**

1. மணிவாசகர், அப்பர் 2. சம்பந்தர், அப்பர்
3. சுந்தரர், சம்பந்தர் 4. சுந்தரர், அப்பர்

**97. மணிவாசகர் முக்தி பெற்ற தலம்**

1. திருப்பெருமண நல்லூர்
2. திருப்புகலூர்
3. திருவஞ்சைக் களம்
4. தில்லைச் சிற்றம்பலம்

**98. திருநாவுக்கரசர் இறுதியாகப் பாடிய தேவாரம்**

1. காதலாகி
2. எண்ணுகேன் என்சொல்லி
3. தானெனை முன்
4. பித்தா பிறை சூடி

**99. சம்பந்தர் செய்த அற்புதங்களில் ஒன்று**

1. பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியது
2. படிக்காசு பெற்றது
3. செங்கட்டியைப் பொன்னாக மாற்றியது
4. ஊமையைப் பேச வைத்தது

**100. சுந்தரர் வாழ்ந்த ஊர்**

1. சீர்காழி
2. திருவாரூர்
3. திருநாவலூர்
4. திருவாதவூர்

**101. புறச்சந்தான குரவர்**

1. திருநந்தி தேவர்
2. சனத்குமாரர்
3. பரஞ்சோதி முனிவர்
4. மறைஞான சம்பந்தர்

**102. அருணந்தி சிவாச்சாரியாரின் குரு**

1. மெய்கண்டார்
2. உமாபதி சிவாச்சாரியார்
3. பரஞ்சோதி முனிவர்
4. சுவேதனப்பெருமாள்

**103. மறைஞான சம்பந்தரின் குரு**

1. உமாபதி சிவாசாரியார்
2. அருணந்தி சிவாசாரியார்
3. மெய்கண்டார்
4. சுவேதனப்பெருமாள்

**104. உமாபதி சிவாசாரியார் வாழ்ந்த காலம்**

1. 13ம் நூற்றாண்டு
2. 10ம் நூற்றாண்டு
3. 14ம் நூற்றாண்டு
4. 16ம் நூற்றாண்டு

**105. ஈழத்துச்சித்தர்**

1. கடையிற் சுவாமிகள்
2. திருமூலர்
3. சட்டைமுனி
4. தாயுமானவர்

**106. தமிழ் நாட்டு சித்தர்**

1. யோகர் சுவாமிகள்
2. பட்டினத்தார்
3. கடையிற் சுவாமி
4. நவநாத சுவாமிகள்

**107. அட்டமா சித்திகள் பெற்றவர்**

1. சமயகுரவர்
2. சித்தர்
3. பக்தர்
4. சந்தான குரவர்

**108. திருக்கடவூர் இறைவன் பெயர்**

1. குன்றுடையான்
2. கேதீஸ்வரன்
3. அமிர்த கடேஸ்வரர்
4. முன்னைநாதர்

**109. திருக்கடவூரில் வீற்றிருக்கும் இறைவி**

1. அபிராமி அம்மை 2. விசாலாட்சி அம்மை
3. கௌரி அம்மை 4. மாதுமை அம்மை

**110. அந்தமும் ஆதியும் தொடுத்துப் பாடுவது**

1. வெண்பா 2. அந்தாதி 3. ஆத்திசூடி 4. கலிப்பா

**111. அந்தாதியில் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கை**

1. 16 2. 96 3. 100 4. 101

**112. சு.இராசரத்தினம் பிறந்த ஆண்டு**

1. 1884 2. 1848 3. 1881 4. 1718

**113. கொழும்பில் பிறந்த சைவத் திருமகன்**

1. ஆறுமுகநாவலர் 2. சு. இராசரத்தினம்
3. விபுலாநந்தர் 4. சேர்.பொன் இராமநாதன்

**114. நித்தியாக்கினி வளர்க்கப்படும் ஆலயம்**

1. கேதிஸ்வரம் 2. கோணேஸ்வரம்
3. முன்னேஸ்வரம் 4. பொன்னம்பலவானேஸ்வரம்

**115. சேர்.பொன் இராமநாதன் எழுதிய நூல்**

1. திருமந்திர விளக்கம் 2. திருக்குறள் விளக்கம்
3. இந்து ஒகன் 4. நல்வழி

**116. சைவ சித்தாந்த பிராமணங்களின் எண்ணிக்கை**

1. 16. 2. 08. 3. 09 4. 03

**117. வேதாந்தத் தெளிவு**

1. தேவாரம் 2. சைவசித்தாந்தம் 3. உபநிடதம் 4. ஆகமம்

**118. ஆணவம், கன்மம்,மாயை என்ற மும்மலமுடையோர்**

1. விஞ்ஞானகலர் 2. சகலர் 3. பிரளயாகலர் 4. பசு

**119. பசு மும்மலங்களில் இருந்து விடுபடுவது**

1. இருவினையொப்பு 2. சந்திநி பாதம்
3. மலபரிபாகம் 4. இறைவனின் திருவருள்

**120. பசு ஆணவ மலத்துடன் நிற்பது**

1. சகலாவத்தை 2. சுத்தாவத்தை
3. கேவலாவத்தை 4. அத்துவிதம்

**121. சதசத்து எனப்படுவது**

1. பதி 2. பசு 3. பாசம் 4. ஆன்மா

**122. சிவம்,சக்தி,நாதம்,வித்து என்பன**

1. அருவம் 2. உருவம் 3. அருவுருவம் 4. சதாசிவம்

**123. பசுவின் மீது இறைவனின் திருவருள் கிடைப்பது**

1. இருவினையொப்பு 2. இறையருள்
3. சத்திநிபாதம் 4. தாடலை

**124. ஆணவம், கண்மம், மாயை என்பன**

1. பாசம் 2. பதி 3. பரம்பொருள் 4. முப்பொருள்

**125. ஆணவ மலமுடையோர்**

1. சகலர் 2. பிரளயாகலர் 3. விஞ்ஞானகலர் 4. கட்டு

**126. திருவருட்பயன் ஆசிரியர்**

1. மெய்கண்டார் 2. உமாபதி சிவாச்சாரியார்
3. அருணந்தி சிவாச்சாரியார் 4. காரைக்காலம்மையார்

**127. பத்து அதிகாரத்தைக் கொண்ட நூல்**

1. திருக்குறள் 2. திருவருட்பயன்
3. திருமந்திரம் 4. சைவசித்தாந்த உண்மை

**128. பதி பற்றிய விளக்கம் உடைய நூல்**

1. நற்சிந்தனை 2. கொடிக்கவி
3. திருவருட்பயன் 4. நெஞ்சுவிடுதூது

**129. அனாதியானவை**

1. ஆணவம் 2. கன்மம் 3. மாயை 4. பாசம்

**130. குருவையும் திருவருளினையும் அடைய முடியாமைக்குக் காரணம்**

1. நல்லறிவு 2. அன்பு
3. ஜீவகாருண்யம் 4. உலக இன்ப மயக்கம்

**131. திருவருளை கண்ணாற் காணக்கூடிய வடிவமாக அமைபவர்**

1. சித்தர் 2. குரு 3. பூசகர் 4. சீடன்

**132. சங்கமர் என்பது**

1. குரு 2. சிவனடியார் திருக்கூட்டம் 3.சிவன் 4. மூலவர்

**133. அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞானத்தை அருளுபவர்**

1. சிவனடியார் 2. குரு 3. சித்தர் 4. ஞானி

**134. குரு வழிபாட்டின் மூலம் வீடு பேறு அடைந்தவர்**

1. சம்பந்தர் 2. தாயுமானவர்
3. அப்பூதியடிகள் 4. பூசலார்

**135. இலிங்க வழிபாட்டில் முக்தியடைந்தவர்**

1. மாணிக்கவாசகர் 2. குலச்சிறையார்
3. பூசலார் 4. மெய்கண்டார்

**136. சங்கம வழிபாடடின் மூலம் முக்தியடைந்த நாயனார்**

1. சிறு தொண்டர் 2. கலிக்காமர்
3. சுந்தரர் 4. சேரமான் பெருமாள்

**137. நாட்டார் வழிபாடு என்பது**

1. ஆகமம் சார்ந்தது 2. ஆகமம் சாராதது
3. உற்சவம் 4. பெண்தெய்வ வழிபாடு

**138. குளிர்ச்சியை வேண்டி வழிபடும் தெய்வம்**

1. மாரியம்மன் 2. முருகன் 3. வைரவர் 4. கண்ணகியம்மன்

**139. காவல் தெய்வம்**

1. அம்மன் 2. வைரவர் 3. மதுரை வீரன் 4. விஷ்ணு

**140. நாட்டார் தெய்வ வழிபாட்டில் இடம்பெறும் பூசை முறை**

1. மரபு 2. சடங்கு 3. மடைபரவல் 4. தெய்வமாடல்

**141. கோல்களை ஒன்றுடன் ஒன்று தட்டி ஆடப்படும் ஆட்டவகை**

1. கோலாட்டம் 2. வசந்தன் கூத்து
3. பொன்னர் சங்கர் கூத்து 4. காமன் கூத்து

**142. மாரியம்மனுக்கு பண்டை காலத்தில் ஆடப்பட்டது**

1. கரகாட்டம் 2. குடக்கூத்து
3. வேலாட்டம் 4. வேப்பிலையாட்டம்

**143. புராணங்களின் எண்ணிக்கை**

1. 16 2. 9 3. 7 4. 18

**144. இராமாயணமும் பாரதமும்**

1. புராணங்கள் 2. இலக்கியங்கள்
3. இதிகாசங்கள் 4. வேதங்கள்

**145. கொக்கட்டிச்சோலை இறைவன்**

1. கொக்கட்டிநாதர் 2. தான்தோன்றீஸ்வரர்
3. சுயம்பு இலிங்கம் 4. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர்

**146. கொக்கட்டிச்சோலை கோயிலை பராமரிப்போர்**

1. கப்புறாளை 2. பூசாரி 3. வண்ணக்கர் 4. பிராமணர்

**147. பெரிய தம்பிப் பிள்ளையால் பாடல் பெற்ற தலம்**

1. கதிர்காமம் 2. ஒட்டுசுட்டான்
3. கொக்கட்டிச்சோலை 4. தான்தோன்றீஸ்வரம்

**148. ஒட்டுசுட்டான் தலத்தின் இறைவி**

1. பூலோக நாயகி 2. பார்வதி அம்மை
3. நகுலாம்பிகை 4. பேச்சியம்மன்

**149. யாழ்ப்பாண இராச்சியத்துடன் தொடர்புடைய ஆலயம்**

1. மண்டூர் முருகன் 2. நல்லூர் கந்தசுவாமி
3. கதிர்காமம் 4. நதகபூசனி அம்மன்

**150. சின்னக் கதிர்காமம் எனப்படும் ஆலயம்**

1. நல்லூர் முருகன் 2. மண்டூர் முருகன்
3. கதிர்காமம் 4. திருச்செந்தூர் முருகன்

**151. கொக்கட்டிசோலை தான்தோன்றீஸ்வரர் இறைவி**

1. பூலோக நாயகி 2. பார்வதி அம்மையார்
3. குலச்சிறையார் 4. வடிவாம்பிகை

**152. ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் பற்றி எழுந்த நூல்**

1. வசன கவிதை 2. மதங்க சூளாமணி
3. ஒட்டிசுட்டான் காவல்பதிகம் 4. தான்தோன்றீஸ்வரர் பதிகம்

**153. கந்தசஸ்டி விரத காலத்தில் திருச்செந்தூர் புராணம் பாடப்படும் ஆலயம்**

1. மண்டூர் முருகன் ஆலயம் 2. நயினை நாகபூசணி ஆலயம்
3. கதிர்காமம் 4. மாமாங்க பிள்ளையார் ஆலயம்

**154. நல்லூர்க் கந்த சுவாமி ஆலய மகோற்சவம் இடம்பெறும் நாட்கள்**

1. 16 2. 09 3. 07 4. 25

**155. எந்த அரசன் காலத்தில் நல்லூர்க் கந்த சுவாமி ஆலயம் கட்டப்பட்டது?**

1. செண்பகப் பெருமாள் 2. பரராஜசேகரன்
3. பராக்கிரமபாகு 4. நிசங்க மல்லன்

**156. இருபாலை சேனாதிராய முதலியார் பாடியது**

1. வேதாந்த கீதம் 2. நல்லையந்தாதி
3. நவநாதம் 4. இருக்குவேத விளக்கம்

**157. நயினை நாகபூசனியம்மன் இறைவி**

1. நாகேஸ்வரி 2. புவனேஸ்வரி
3. மாருதபுரவீக வல்லி 4. விசாலாட்சியம்மை

**158. அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் புவனேஸ்வரி சக்தி பீடம் என போற்றப்படுவது**

1. முன்னேஸ்வரம் 2. நகுலேஸ்வரம்
3. நயினை நாகபூசணியம்மன் ஆலயம்
4. கட்டுகலை செல்வ விநாயகர் ஆலயம்

**159. நாகபூசனியம்மன் அருள் பெற்றவர்கள்**

1. இயக்கர் 2. நாகர் 3. ஆரியர் 4. திராவிடர்

**160. சாந்த நெறியுடன் தொடர்புடைய கடவுள்**

1. சிவன் 2. விஸ்ணு 3. சக்தி 4. சூரியன்.

**161. நயினை நாகபூசணி ஆலயத்தில் தொன்மைக் கருவூலம்**

1. மரம் 2. நாகம் 3. லிங்கம் 4. கடல்

**162. ஆனிப் பூரணையில் நிலவொளியில் தெப்பத் திருவிழா நடைபெறும் ஆலயம்**

1. நல்லூர் கந்தசுவாமி 2. தெல்லிப்பளை துர்க்கையம்மன்
3. நயினை நாகபூசணி அம்மன் 4. நகுலேஸ்வரம்

**163. வரலாற்றுப் புகழ்மிக்க விஷ்ணு ஆலயம்**
1. முகத்துவார விஷ்ணு ஆலயம்
2. வல்லிபுரத்தாழ்வார் ஆலயம்
3. சக்கர ஆலயம்
4. மூவாழ்வார் ஆலயம்

**164. வல்லிபுர ஆழ்வார் ஆலயம் மீது பாடப்பட்ட பிரபந்தம்**
1. குறுக்கட்டுத் திருவந்தாதி
2. இளவல்லித்தூது
3. கம்சன் ஊஞ்சல்
4. திருவந்தாதி

**165. இளவல்லிக்குத் திருமால் வழங்கியது**
1. சுதர்ஷணம்
2.மாலை
3. வரம்
4. சங்கு

**166. வல்லிபுர ஆழ்வார் ஆலயம் பற்றிக் கூறும் நூல்**
1. தட்சிணகைலாசமான்மியம்
2. ஆழ்வார் பாடல்கள்
3. திருப்புகழ்
4. அபிராமி அந்தாதி

**167. தலமகிமை பற்றிக் கூறும் புராணம்**
1. சிவராத்திரி புராணம்
2. சூரிய புராணம்
3. கந்த புராணம்
4. திருக்கரைசைப் புராணம்

**168. விரத மகிமைப் பற்றிக் கூறும் புராணம்**
1. சிவராத்திரி புராணம்
2. திருச்செந்தூர் புராணம்
3. அக்கினிப் புராணம்
4. சிவபுராணம்

**169. வரத பண்டிதரால் இயற்றப்பட்டது**
1. ஏகாதசி புராணம்
2. சூரிய புராணம்
3. பெரிய புராணம்
4. இலிங்க புராணம்

**170. ஏகாதசிப் புராணம் படிப்பதனால் ஏற்படும் நன்மை**
1. பொன் கிடைக்கும்
2. கல்வி கிடைக்கும்
3. தெய்வ அருள் கிடைக்கும்
4. வறுமை,பாவம் என்பன நீங்கும்

**171. மணிமேகலைக் காப்பியத்துடன் தொடர்புபட்ட தலம்**
1. நல்லூர்
2. நயினை நாகபூசணி அம்மன்
3. வல்லிபுர ஆழ்வார் ஆலயம்
4. சின்னக் கதிர்காமம்

**172. நயினை நாகபூசணி தீர்த்தம்**
1. சித்தாமிர்த புட்கரணி
2. பாலாவி
3. பாபநாசம்
4. மாயவனாறு

**173. செலலிகினி சந்தேச என்பது**
1. மைனா விடு தூது
2. மயில்விடு தூது
3. குயில்விடு தூது
4. மகாவம்சம்

**174. மூலமூர்த்தி நின்ற, இருந்த,கிடந்த கோலத்தில் அமைந்திருக்கும் ஆலயம்**
1. சிவன் ஆலயம்
2. திருமால் ஆலயம்
3.பிரம்மா ஆலயம்
4. முருகன் ஆலயம்

**175. விஷ்ணு தேவாலயம் அமைந்துள்ள இடம்**
1. மட்டக்களப்பு
2. கொழும்பு
3. பெரிய நீலாவாணை
4. காலி

**176. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆரம்ப கர்த்தா**

1. சேர்.பொன் இராமநாதன் 2. விபுலானந்தர்
3. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் 4. சு.இராசரத்தினம்

**177. சமய நோக்கத்திற்காக யாழ்ப்பாணம், கண்டி, நாவலப்பிட்டி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட சங்கம்**

1. சைவ வித்தியா விருத்திச் சங்கம்
2. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
3 .விவேகானந்த சபை 4. அறநெறிப் பாடசாலை

**178. சைவத் தமிழ் புலமையை வளர்க்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட கலாசாலையின் அமைவிடம்**

1. மட்டக்களப்பு 2. மன்னார் 3. திருநெல்வேலி 4. யாழ்ப்பாணம்

**179. பண்ணுடன் பாடப்படுவது**

1. பெரிய புராணம் 2. தேவாரம் 3. திருவாசகம் 4. திருப்புகழ்

**180. சமயத்தையும் சமுதாயத்தையும் நிலை நிறுத்தும் கூட்டுச் செயற்பாடு**

1. மரம் வெட்டுதல் 2. அன்னதானம்
3. கூட்டுப் பிரார்த்தனை 4. பாடசாலை செல்லல்

**181. விக்கரமாதித்த மன்னனின் துணைவியார் பெயர்?**

1. இளவல்லி 2. இலக்கண சுந்தரி 3. தமிழுருவி 4. நளவல்லி

**182. தூல லிங்கம் குறிப்பது**

1. பலிபீடம் 2. கோபுரம் 3. கொடிமரம் 4.காவல் தெய்வம்

**183. பத்ரலிங்கம் எனப்படுவது**

1. பலிபீடம் 2. சிவலிங்கம் 3. பிரதான வீதி 4. நந்தி

**184. சிரசைக் குறிப்பது**

1. கொடி மரம் 2. கர்ப்பக்கிரகம் 3. பத்ரலிங்கம் 4. தூல லிங்கம்

**185. சந்தச் சிறப்பு வாய்ந்த பாடல்கள்**

1. தேவாரம் 2. திருப்புகழ் 3. பராபரக் கன்னி 4. திருவாசகம்

**186. திருக்கேதீஸ்வர நாதர் மீது தேவாரப் பதிகம் பாடிய நாயன்மார்கள்.**

1. சம்பந்தர்,அப்பர் 2. அப்பர், சுந்தரர்
3. சுந்தரர், மணிவாசகர் 4. சம்பந்தர், சுந்தரர்

**187. இறைவனால் அம்மையே எனச் சிறப்பாக அழைக்கப்படுபவர்**

1. திலகவதி 2. மங்கையர்க்கரசியார்
3. பரவையார் 4. காரைக்காலம்மையார்

**188. இறைவனின் ஐந்தொழில்களை முழுமையாகக் குறிப்பது**

1. கொடியேற்றம் 2. தேர்த் திருவிழா
3. தீர்த்தம் 4. மஹோற்சவம்

**189. சைவநெறயில் மேலானதாக மதிக்கப்படுவது**

1. அறிவு 2. கலை 3. துறவு 4. அன்பு

**190. தமிழில் சிவாகமப் பொருளைக் கூறும் நூல்**

1. திருக்குறள் 2. திருமுருகாற்றுப் படை
3. பகவத் கீதை 4. திருமந்திரம்

**191. சைவ சமயவத்தவர் யாரும் கட்டாயமாகப் பெற்றுக் கொள்ள வேண்டியது**

1. சமயத் தீட்சை 2. விசேட தீட்சை
3. நிர்வாணத் தீட்சை 4. ஆச்சார்ய அபிஷேகம்

**192. கந்தபுராணத்தில் மறை பொருளாக அமைந்துள்ள சமயக் கொள்கை**

1. வேதாந்தம் 2. சைவ சித்தாந்தம்
3. சமரச சன்மார்க்கம் 4. ஏகான்ம வாதம்

**193. கந்த புராணத்தில் திகடசக்கர செம்முக மைந்துளான் என்று குறிப்பிடப்படுபவர்**

1. சிவபெருமான் 2. உமாதேவியார்
3. முருகன் 4. பிள்ளையார்

**194. மார்கழி மாத்ததில் சிறப்பாக ஓதப்படுவது**

1. சிவபுராணம் 2. கோளறு பதிகம்
3. அபிராமி அந்தாதி 4. திருவெம்பாவை

**195. இந்து சமய நூல்கள் காலத்தால் மிகப் பழைமை வாய்ந்தது**

1. ஆகமம் 2. வேதம் 3. புராணம் 4. மகாபாரதம்

**196. சுந்தரரின் குருபூசைத் தினம்**

1. சித்திரைச் சதயம் 2. வைகாசி மூலம்
3. ஆனி மகம் 4. ஆடிச் சோதி

**197. சிவனுக்குரிய நட்சத்திரம்**

1. புனர்பூசம் 2. பரணி 3. திருவாதிரை 4. சதயம்

**198. உள்ளது இல்லாததாகாது: இல்லது உள்ளதாகாது எனும் கொள்கை**

1. ஏகான்ம வாதம் 2. மாயா வாதம்

